பக்கங்கள் எட்டு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா 5-00

# வலம்புரி

# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

**அர்ச்சனா ஜுவலர்ஸ்**

118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[கி-2127]

சவகு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 28 வியாழக்கிழமை (12-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 213

## ஜனாதிபதியின் முடிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

பாராளுமன்றக் கூட்டத் தொடரை செப்டெம்பர் 7ம் திகதிவரை ஒத்திவைப்பதற்கும் புதிய அரசியல் அமைப்பிற்கு மக்களுடைய அங்கீகாரம் பெறுவதற்கும் ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கும் ஜனாதிபதி சந்திரிகா எடுத்த நடவடிக்கைக்கு நேற்றுக்கூடிய அமைச்சரவை ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

அரசியல் யாப்பின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று நடத்துவதென பொதுஜன ஐக்கிய முன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை கூட்டத்திலிருந்து திஸநாயக்கா வெளியேறினார்!

### வாக்கெடுப்பை நடத்த பிரதமர் தலைமையில் குழு

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா தலைமையில் அமைச்சர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் அமைச்சருமான எஸ். பி. திஸநாயக்கா மற்றும் அமைச்சர்களான ஜி. எல். பீரிஸ் மகிந்தராஜபக்ஷ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா தனது கருத்துக்களை எடுத்துக்கூறிவிட்டு கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

இதேவேளை அமைச்சர்கள் ஜி. எல். பீரிஸ், மகிந்த விஜேசேகர, ஜெயராஜ் பெர்னான்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ★ பாராளுமன்றம் ஒத்திவைப்பு ★ சர்வஜனவாக்கெடுப்பு

# ஜனாதிபதியின் அறிவிப்புக்கு தகுந்த பாடம் புகட்டுவோம்!

## ஜனாதிபதியின் உரை இன்று

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இன்று பிற்பகல் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## ரணில் விக்கிரமசிங்கா ஆக்ரோஷம்

(நமது நிருபர்)

பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைப்பதும், சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதும் ஏகாதிபத்தியத்தின் முதற்கட்ட நடவடிக்கையாகும் என்றும், ஜனநாயகத்திற்கு ஒவ்வாத செயல் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கூட்டத் தொடரை செப்ரெம்பர் 7ந் திகதி வரை ஒத்திவைத்தது டன் ஆகஸ்ட் 21ம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் அறிவிப்பையடுத்து ரணில் விக்கிரமசிங்கா விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

பொதுஜன ஐக்கியமுன்னணியின் அமைச்சர்களுக்கோ, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது அக்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கோ அறிவிக்காது எதேச்சதிகாரப் போக்கைக் கடைப்பிடித்து சர்வாதிகாரத்தையே நிலைநாட்ட ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கையே இதுவாகும்.

ஐக்கியதேசியகட்சியுடன் இணைந்து 115 அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சமர்ப்பித்திருந்தும் அதனை அரசு உதாசீனம் செய்து விட்டு, பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்திருப்பது ஜனநாயகத்தைக் குழி தோண்டிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலைகளின் நிலை குறித்து

## கல்விப் பணிப்பாளர்களுடன் பலாலியில் ஆராய்வு!

[யாழ்ப்பாணம்]

பல்கலைக்கழக மாணவன் திவ்வியனின் கைது தொடர்பாக பாடசாலை மாணவர்களின் நிலைகுறித்து ஆராயும் பொருட்டு யாழ் குடாநாட்டு கல்விப்பணிப்பாளர்கள் ஐந்து பேரும் நேற்றுக் காலை பலாலி படைத் தளத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பலாலி படைத் தளத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம், எஸ் சிவராசா எஸ். இராசையா எஸ் விக்கினேஸ்வரன் எஸ். செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாணவர் கல்வி தொடர்பாகவும் பாடசாலைகளின் பாதுகாப்பு சம்பந்தமாகவும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## திவ்வியனின் விடுதலைக்காக அணி திரள்வோம்!

### மாணவர்களுக்கு ஒன்றியம் அழைப்பு

மாணவன் திவ்வியனை விடுவிக்கக்கோரி நாம் நடத்திவருகின்ற பகிஷ்கரிப்புபோராட்டத்தை நசுக்கும் நோக்கோடு பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தைச்சுற்றி ஆயுதப்படைகளை நிறுத்தி துப்பாக்கிமுனையில் எமது ஜனநாயக போராட்டத்தினை அச்சுறுத்திவருகின்ற போதும் திவ்வியனின் விடுதலைகிட்டும்வரை எமதுபோராட்டம் தொடரும் இதற்காக உங்கள் அனைவரினதும் முழுஆதரவையும் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

[8ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதால் நம்பிக்கையில்லாப் பிரேரணை செல்லுபடியற்றதாகி விட்டது

(கொழும்பு)

பாராளுமன்றக் கூட்டத் தொடரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ந் திகதி வரை ஒத்திவைத்ததையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணை செல்லுபடியற்றதாகிவிடுமென முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சாம் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நியாயப்பிரமாணங்களின்படி பாராளுமன்றக் கூட்டத்தொடர் இரு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் ஐக்கியதேசியக் கட்சி சமர்ப்பித்திருந்த நம்பிக்கையில்லா பிரேரணை செல்லுபடியற்றதாகிவிடுமெனவும்,

தேவையாயின் ஐ. தே. க. மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார். (ந)

## வடமராட்சி மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகமாணவன் திவ்வியனின் கைதைக் கண்டித்துவடமராட்சிப்பகுதியிலுள்ள பிரபல பாடசாலை மாணவர்கள் நேற்று வகுப்புகளை பகிஷ்கரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகிஷ்கரிப்பு

[8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் முடிவுக்கு கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஒத்திவைப்பது தொடர்பாகவும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாகவும் ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ள முடிவு குறித்து வேறு அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா பாராளுமன்றகூட்டத் தொடரை ஒத்திவைத்திருப்பதும் சர்வஜனவாக் கெடுப்பு நடத்தத் தீர்மானித்திருப்பதும் ஜனநாயக விரோத செயல் என்றுகண்டனம் தெரிவித்துள்ளன.

இதேவேளை மக்கள்விடுதலைமுன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக்கட்சி அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ்ரெலோ ஆகிய கட்சிகள் தமது எதிர்ப்பையும் தெரிவித்துள்ளன. (வ)

## பெரும் ஆர்ப்பாட்டத்திற்கு ஐ.தே.கட்சி முஸ்தீபு

### 19ந்திகதிநடத்த ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் எதேச்சதிகார முடிவைக் கண்டித்து இம்மாதம் 19ந் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று சிறிகோத்தாவில்

(8ம் பக்கம் பார்க்க)

## 300 தொலைபேசி இணைப்புகள் துண்டிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் சுமார் 300க்கு மேற்பட்ட கேபிள்தொலைபேசி இணைப்புக்கள் ரெலிகொம நிறுவனத்தினரால் நேற்று துண்டிக்கப்பட்டது.

தொலைபேசிக்கட்ட

((8ம் பக்கம் பார்க்க

யா/ விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்.

# 125-வது ஆண்டு விழாவும், பரிசு நாளும், ஸ்தாபகர் தினமும்

## வாழிய பல்லாண்டு

யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 125 வது பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதற்கு எனக்கொரு சந்தர்ப்பங்கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

நான். இக்கல்லூரியில் கல்வி பயின்ற நாட்களை சிறிது மீட்டிப் பார்க்கிறேன் ஆகா! என்ன பசுமையான இனிமையான நாட்கள். தட்டவேண்டிய இடத்தில் தட்டி அரவணைக்க வேண்டிய இடத்தில் அரவணைத்து எமையெல்லாம் இந்நிலைக்கு கொண்டுவந்துள்ளாள் விக்ரோறியா என்னும் கல்வித்தாய்.

எத்தனையோ கல்விமான்கள், விளையாட்டுவீரர்கள், ஒழுக்கசீலர்கள் என்று யாபேரும் தன்னை ஏணியாகப் பாவித்து ஏறிச் சென்றபோதும், தான் அப்படியே எவ்வித மாற்றமுமின்றி. அவர்கள் முன்னேற்றத்தை மட்டுமே கண்குளிரக் கண்டு, இறுமாந்து நிற்கிறாள்.

அன்றிலிருந்து இன்றுவரை சுழிபுரம் என்ற கிராம நங்கையின் நெற்றித் திலகம் போலிலங்கும் இக்கல்லூரி. மாணவர்களுக்கு கல்வியுடன் நில்லாது விளையாட்டுகள், சாரணியம், கிராமிய முன்னேற்றத்தில் பங்களித்தல் போன்றவற்றில் உதவுவதன் மூலம், இன்றைய வாழ்க்கையின் சவால்களுக்கும் மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும் பங்களிக்கிறது.

இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் அயராது உழைத்த, உழைக்கும் அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அபிமானிகள் அனைவருடைய பணியும் பாராட்டுக்குரியது. அப்பணி மென்மேலும் சிறக்க இறையருளை வேண்டி நிற்கிறேன்.

'கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

திரு கா. சந்திரராசா
(ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர்)
இணைப்பாளர் – UNCR

வாழ்த்துவோர்

ஸ்ரீவரதராஜா வெதுப்பகம்
பிரதான வீதி, சுழிபுரம்.

குமரன் ஹாட்வெயர்
வழக்கம்பரை, சுழிபுரம்.

றியோ குளிர்பான நிலையம்
(வானம் பாடி)
பிரதான வீதி, சுழிபுரம்.

நவம்ஸ் தொலைத் தொடர்பு நிலையம்
070-212355
பிரதான வீதி, சுழிபுரம்.

1876 (ஆண்டு) — 2001 (ஆண்டு)

காலம் :

2001. 07. 12, 13 வியாழன், வெள்ளி
பிற்பகல் 1.30 மணி

இடம் :

கல்லூரி திறந்த வெளியரங்கு

தலைவர் :

**திருமதி**
**அ. வேலுப்பிள்ளை**
(அதிபர்)

முதல் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினர் :

**உயர் திரு**
**கு. பொ. சி. வரதராசா**
**அவர்கள்**
(மேல் நீதிமன்ற நீதிபதி)

இரண்டாம் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினர்:

**திரு ந. திரிலோகநாதன்**
J.P.U.M.
(தலைவர், பிரதேச சபை வலி மேற்கு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

ஸ்ரீகலாக் ஏஜென்ஸி
(வானம் பாடி)
பிரதான வீதி, சுழிபுரம்.

## என்னை வளர்த்த அன்னை விக்ரோறியா என்றும் வளம் பெற்று வாழ்க

எமது கலைக்கோவிலாம் விக்ரோறியா அன்னை 125 வருடங்கள் பூர்த்தியாகிப் பெருமையுடன் மிளிர்கின்றாள். அதனையொட்டி ஆசிச்செய்தி வழங்குவதில் நான் மட்டில்லா மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

ஐந்தாம் ஆண்டு தொடக்கம் மருத்துவக் கல்லூரி புகும் வரை எனது இரண்டாவது தாயாகிய alma mater விக்ரோறியா அன்னையின் மடியில் தவழ்ந்து நடைபயின்று பெரியவளானேன் என்பதை எப்பொழுதும் நன்றிப் பெருக்குடனேயே கூறிக் கொள்வேன் நான் ஒரு விக்ரோறியன் என்பதை வாழ்ந்த வாழுகின்ற இடமெல்லாம் எடுத்துச் சொல்வேன்.

நான் படித்த காலத்தில் அர்ப்பணிப்புடன் என்னைக் கற்பித்த ஆசிரியர்களை என்றும் நன்றியுடன் நினைத்துக் கொள்வேன் எங்கள் கல்லூரித் தாயை அணி செய்த அதிபர்கள் பலர் அவர்களுள், பேராசிரியர் வி. லாபி சிமோல், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், திரு. பி.வி. தம்பியப்பா, திரு தம்பு. ந. சிவஞானம் திரு. வை. இராசசுந்தரம் திரு க. அருணாசலம், செ. பத்மநாதன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களின் ஆளுமையும், நிர்வாகத் திறமையும் எங்கள் கல்லூரியைக் கட்டியெழுப்பியது. திரு க அருணாசலம் அதிபராக இருந்த காலத்திலேயே, நான் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

இன்று கல்லூரியின் அதிபர்பதவியை ஒரு பெண்மணியான திருமதி அ. வேலுப்பிள்ளை (செல்வி ரீச்சர்) அலங்கரிக்கின்றார் எங்கள் கல்லூரியின் வரலாற்றில் இடம்பெற்ற முதற் பெண் அதிபர் இவரேயாவர் அவரின் திறமையையும் ஆளுமையையும் பற்றிப் பலர் கூறக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றேன் காரணம் அவர் எனது தாவரவியல் ஆசிரியவராவார்

கனகரத்தின முதலியாரால் கருவாக்கப்பட்டு மனேஜர் செல்லப்பாவால் வளர்த்தெடுக்கப்பட்டுப் பின் அரசாங்கக் கல்லூரியாக மாற்றம் பெற்றது எங்கள் கல்லூரி நூற்றிருபத்தையாவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடும் இவ்வேளையி எங்கள் கல்லூரி ஸ்தாபகர் கனகரத்தின முதலியாரின் கனவை நனவாக்குவதோடு இந்தப் பிரதேசத்தின் ஒளிவிளக்காக ஒளிர்ந்து பல கல்வியுடையோரை உருவாக்கிச் சாதனை படைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

எங்கள் விக்ரோறியாக் கல்லூரிக்கெனத் தனித்துவமான பாரம்பரியமுண்டு இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர் உலகெங்கணும் பரந்து நல்ல உயர் நிலையில் வாழுகின்றனர். எங்கள் கலைக்கோவிலைக் கட்டியெழுப்புவதற்குத் தாராளமாகப் பண உதவி புரிந்து வருகின்றனர். ஆகவே விக்ரோறியா ஒரு மகிழ்ச்சிகரமான கலைக்குடும்பமாக மிளிர்வதைக் கண்டு நாமனைவரும் மகிழ்ச்சி அடைவதோடு அதன் உயர்வுக்கு உழைப்போமாக.

வணக்கம்

வைத்திய கலாநிதி
திருமதி சந்திரகுமார் - பவானி
(மகப்பேற்று நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை)

## தொண்டைமானாறு வெளிக்கள நிலைய பரீட்சைக்கு தோற்றுவதில் மாணவர் அசிரத்தை

(புலோலி)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் க.பொ.த (உயர் தர) வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைகளுக்குத் தோற்றுவதில் மாணவர்களுக்கு ஆர்வம் இல்லாதிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடத்தப்பட்ட இரசாயன பாடத்திற்கான வினாத்தாள்கள் தரமின்றி இருந்ததாகவும், வேறு சில பாடங்களுக்கான புள்ளியிடும் திட்டம் உரிய காலத்தில் அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் குறை கூறப்படுகின்றது.

தற்பொழுது நடைபெற்று வரும் கலைப்பாடங்கள் பரீட்சைக்கு மாணவர்கள் ஒரே நாளில் 6 மணித்தியாலங்கள் தோற்ற வேண்டியிருப்பதாகவும்.

இதனால் மாணவர்கள் பல அசௌகரியங்களை அனுபவிப்பதாகவும் பொதுப் பரீட்சைகளுக்கு இவ்வாறு தொடர்ந்து பரீட்சைகள் நடத்தப்படுவதில்லை என்றும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-52)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் புதிய மத்தியஸ்தர்களை உள்வாங்கும் பொருட்டு ஏப்ரல் மாதம் நடத்திய கிரிக்கெட் விதிகள் தொடர்பான எழுத்துப் பரீட்சையின் அடிப்படையில் 21 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்க செயலாளர் எஸ் சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு:- அ.செ. நிஷாந்தன்- யாழ்ப்பாணம், சு கோகுலன்- கொக்குவில், தே. ஜெயதீன்- மானிப்பாய் நா. ஜனார்த்தன்- சுதுமலை ம பற்றிக்டிறஞ்சன்- யாழ்ப்பாணம், சி அருளானந்தம்- யாழ்ப்பாணம், ம. மோகனதாஸ்- மானிப்பாய், மா. முரளி- பருத்தித்துறை. க. கௌரிகாசன்- பருத்தித்துறை, க.சிவாகரன்-கொக்குவில், ச தவநேசன்- ஈச்சமோட்டை. ப. பிரகலாந்- மானிப்பாய், த ஹரிஷாந்- அரியாலை, ரூபந்துலன்- நல்லூர், யோ விமலன்- கல்வியங்காடு. ச சுரேஷ்மோகன்- சுண்டுக்குளி, கா உமாசஜன்- உருப்பிராய், பா ஜெயரூபன்- மானிப்பாய், ஞா. ஞானதயாளன் கரவெட்டி, வி:சாரங்கன்- அல்வாய், சி.கௌசிகன்-அல்வாய், (உ)

## வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கை மந்த நிலை இராணுவ ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இலங்கை இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகள் வெளிநாடுகளின் அழுத்தங்கள் காரணமாக மந்தகதியை அடைந்துள்ளன.

இவ்வாறு பிரபல இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக இடம்பெற்ற விமானத் தாக்குதல்களை அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் கண்டித்ததுடன், சமாதான நடவடிக்கைகள் குழம்பிவிடும் என்று விடுத்த எச்சரிக்கையினையடுத்து இராணுவ நடவடிக்கைகள் மந்த நிலையை அடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## மன்னார்க்கடலில் மீன்பிடிக்க விதித்த தடை நீக்கப்பட்டது

(வவுனியா)

மன்னார்கடலில் 15 குதிரைவலுக்கொண்ட இயந்திரப்படகில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்கள் கடற்படை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏனைய பிரதேசங்களில் 15 குதிரைவலுக் கொண்ட இயந்திரப் படகில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

இரு பெரும் அரசியற் கட்சிகளும் இணைந்து ஒரு தேசிய அரசாங்கம் அமைப்பதே இன்றைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வாகும் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் சமுர்த்தி விவகார அமைச்சருமான எஸ் பீ திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியற் கட்சிகளின் தலைவர்கள் தமக்குள் வேறுபாடுகளை மறந்து நாட்டின் பிரச்சினைகளுக்கே முன்னுரிமை வழங்க முன்வர வேண்டுமென்று ஐலன்ட் பத்திரிகைக்கு அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு உடனடியான தீர்வு காண்பது முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது. அதன் மூலம் வேலை வாய்ப்புகளை பெருக்குவது, தொழிலாளர் நலன்புரி திட்டங்களை ஏற்படுத்துவது புதிய அரசியலமைப்பை ஏற்படுத்துவது ஆகியனவே தேசிய அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணிகளாகும் எனவும் எஸ்.பீ.திசாநாயக்க தெரிவித்தார். [உ]

## சாரதிகள் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி நல்லூரடிப் பகுதியில் நேற்று மோட்டார்சைக்கிள், லாண்ட்மாஸ்ரர், கார் ஆகியன ஒன்றுடனொன்று ஒரே நேரத்தில் மோதியதில் சாரதிகள் மூவரும் சிறுகாயத்திற்குள்ளாகினர்.

விபத்தில் அகப்பட்ட மோட்டார் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்துள்ளது. [உ-10]

## முகாமையாளர் இடமாற்றம்

(புலோலி)

வடபிராந்தியபோக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ முகாமையாளராக, யாழ்ப்பாணம் டிப்போ முகாமையாளர் எஸ் கமலநாதன் பொறுப்பேற்றுள்ளார்.

பருத்தித்துறை டிப்போ முகாமையாளராகக் கடமையாற்றிய எஸ்.எஸ்மகாதேவன் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ-52)

## கதிரைகள் அன்பளிப்பு

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரிப் பாவனைக்கென பட்டயக்கணக்காளர் ஏ சோமசுந்தரம் பிள்ளை சுமார் 3ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதனால் ஆசிரியர்களின் பாவனைக்கான கதிரைகள் பற்றாக்குறை நீங்கியுள்ளதாக அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தெரிவித்தார். (உ-52)

## படையினர் காயம்

(கொழும்பு)

கடந்த திங்களன்று அதிகாலை 4 45 மணியளவில் சரசாலை தெற்கில் உள்ள படையினரின் பாதுகாப்பு அரண் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் 3 படையினர் காயமடைந்துள்ளதாக ஊடகத்தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விபத்தில் காயம்

(மந்திகை)

மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்று கொண்டிருந்த வேளை நாய் குறுக்கே ஓடியதில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்தவர் பருத்தித்துறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கடந்த சனியன்று மண்டான் பகுதியில் நடைபெற்ற சம்பவத்தில் வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த கந்தையா பிள்ளை சுதர்சன் (வயது-24) என்பவரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (உ-7)

## ஐ.தே க.வுக்கு நிதி வழங்க புலிகளின் அனுதாபி இலங்கை வருகை

(கொழும்பு)

ஐ தே க வின் நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் பிரசார நடவடிக்கைகளுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் ஐரோப்பாவில் இயங்கும் விடுதலைப்புலிகளின் அனுதாபியும் ஆயுதத்தரகருமான ஒருவர் இலங்கை வந்திருப்பதாக புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

தன்னை ஒரு தொல்பொருள் ஆய்வாளராக காட்டிக்கொண்டு புராதன கலாசார சின்னங்களை ஆய்வு செய்பவர் போல் இவர் ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில தங்கியிருப்பதாகவும்.

புலிகள் மீது பிரிட்டனில் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள வங்கிகளில் முடக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் 400 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகளை மீட்பதிலே இவர் சம்பந்தப்பட்டவர் எனவும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## பல்கலை.மாணவன் கைது சுரேஸ் அணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகமாணவன் திவ்வியனின் கைது தொடர்பாக ஈ பி ஆர் எல் எப் சுரேஸ் அணியினர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தத்திற்கும் அநாவசிய மற்ற கைதுகளுக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் எதிராக பல்கலை மாணவர்கள் மேற்கொள்ளும் போராட்டங்களும் எதிர்ப்பு உணர்வுகளும் அரசுக்கும் படையினருக்கும் பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. சுயநிர்ணய உரிமை கொண்ட தமிழ் பிரகடனத்தையும் சகிக்க முடியாத அரசாங்கம் யாழ் பல்கலைக்கழகத்தை மூடியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு எல்லாத் தமிழ் மாணவர்களையும் போராட்டத்திற்குள் தள்ளாமல் கைது செய்யப்பட்ட மாணவனை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். (உ-5)

## ஐ. தே. கவுடன் இணைந்து தேசிய அரசமைக்க முடியாது பிரதமர் மறுப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கமொன்று அமைப்பது பற்றிய பேச்சுக்களை இனிமேல் ஐ தே கவுடன் வைத்துக்கொள்வதில்லை என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், ஐ தே. க இரட்டைவேடம் போடுவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

எம்முடனான பேச்சுக்களில் ஐ தே க ஒன்றைக் கூறுகின்றது. ஆனால் பாராளுமன்றத்தில் சென்று வேறு ஒன்றைக் கூறுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை ஐ தே. க பாராளுமன்றத்தில் உள்ள குழுக்களின் எதிர்க்கட்சிகளுக்கு பெரும்பான்மையைத் தருமாறு சபாநாயகருக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

இது நம்பிக்கைத்துரோகமான நடவடிக்கை என பிரதமர் தெரிவித்தார்.

இவர்களுடன் இணைந்து நிலையான அரசொன்றை அமைப்பதெவ்வாறு? இப்படி ஆத்திரத்துடன் பிரதமர் கேள்வியெழுப்பியுள்ளார். (உ)

## தென்மராட்சி வலயத்தில் 88 தொண்டர் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி நேர் முகப பரீட்சைக்கு தோற்றி தெரிவு செய்யப்பட்ட 88பேரின் பெயர்ப்பட்டியல் நெல்லியடியில் இயங்கும் தென்மராட்சி வலய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

வலயப் பாடசாலைகளில் 98 ஆம் ஆண்டு மார்கழி மாதத்திற்கு முன் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய 64 பேரினதும்,

99 ஆம் ஆண்டு மார்கழி மாதத்திற்குப் பின் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய 24 பேரினதும் பெயர் விபரங்கள், பெற்ற புள்ளிகள் வலய அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. (உ-23)

## யாழ் பல்கலைக்கழக கல்விசார்- கல்விசாரா ஊழியர்களுக்கு துணைவேந்தர் அழைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்புரையின் படி மூடப்பட்டுள்ள போதிலும் கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் வழமைபோல் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் எனவும்,

பல்கலைக்கழக அலுவலர்கள் மற்றும் மாணவர்களுடைய ஒத்துழைப்புடன இயல்பு நிலையை மீளக் கொண்டுவர சகல முயற்சிகளும் முன்னெடுக்கப்படும் எனவும் யாழ்; பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (து)

## கைந்நூல் விநியோகம்

[மந்திகை]

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல்விநியோகிக்கப்பட்டு வருவதாக வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா தெரிவித்தார். [உ-23]

# எந்நிலையிலும் பாடசாலைகளை மூடக்கூடாது

## அதிபர்களுக்கு படைத்தரப்பு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

எந்தச் சூழ்நிலையிலும் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளை மூடக்கூடாதென வலயக் கல்விப் பணிப்பாளர்களையும், பாடசாலை அதிபர்களையும் படைத்தரப்பு அழைத்து அறிவுறுத்தியுள்ளது.

நேற்றைய தினம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 5 வலயங்களின் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களை பலாலி இராணுவத்தளத்திற்கு அழைத்து கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

யாழ் மாவட்ட இராணுவ தளபதி சுனில் சந்திரபால மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டது.

திவ்வியனின் கைதின் பின்னணியில் யாழ்.பல்கலைக் கழகம் காலவரையறையற்று மூடப்பட்டதையடுத்து, யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், வகுப்புக்களைப் புறக்கணிக்குமாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அதிபர்கள் மற்றும் மாணவர்கள் துணை போகாது, மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஒன்றையே கருத்திற் கொண்டு செயற்படும்படியும் கலந்துரையாடலில் படைத்தரப்பினால் கூறப்பட்டது.

தொடர்ந்து, மாணவர்களின் வருகை தொடர்பாக அதிபர்கள் கவனம் செலுத்துவதுடன், அவர்கள் பாடசாலைக்கு வராது போராட்டத்தில் ஈடுபடும் பட்சத்தில் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் விடுதலை செய்யப்பட மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பல்கலை மாணவன் திவ்வியன் தொடர்பான விசாரணைகள் முடிந்தவுடன் நீதிமன்றில் அவரை ஆஜர் செய்யவுள்ளதாகவும்,

அவர் தொடர்பான தமது நிலைப்பாடு குறித்து தாயாரிடம் விபரமாக கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-10]

## குடிபோதை விழிப்பு கருத்தரங்கும் பரிசளிப்பும்

(சுச்சமோட்டை)

அண்மையில் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் குடிபோதை விழிப்புணர்வு பற்றிய கருத்தரங்கும் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது.

இயூடெக் நிறுவனத்தின் சமூக விழிப்புணர்வு குழுவின் ஆதரவுடன் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில், சிறப்பு விருந்தினராக மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் கலந்து கொண்டு சமூக மட்டத்தில் குடிபோதையால் ஏற்படும் பாதிப்பு பற்றியும் அதை தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் உரையாற்றினார்.

குடிபோதைத் தவிர்ப்புப் போட்டிகளில் பங்கு பற்றி முதலிடம் பெற்றவர்களுக்கு பரிசளிப்பு இடம் பெற்றது.

(உ-59)

## செயற்பாட்டறை உபகரணங்கள் அனுப்பி வைப்பு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதி பிரதேச செயலகங்களினால் நடத்தப்பட்டு வரும் அபிவிருத்தித்தொண்டர்களுக்கான செயற்பாட்டறை உபகரணங்கள் புனர்வாழ்வு அமைச்சினால் பிரதேசசெயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மின்னிணைப்பு, கட்டுமானம் மரதொழில் நுட்பம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இவற்றினை தரம் பிரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவ்வார இறுதிக்குள் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் பிரதேசசெயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-23)

## பாடசாலைத் தேவைக்கு காணி கொள்வனவு

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள 8 பரப்பு காணியை பாடசாலைத் தேவைக்குக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை பாடசாலை அபிவிருத்திச்சங்கம் மேற்கொண்டுள்ளது.

இக் காணி கொள்வனவுக்கான நிதியை பாடசாலையின் பழைய மாணவிகள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அன்பளிப்பாகவழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

தற்போது இராணுவத்தினரின் பாவனையிலுள்ள மேற்படி பாடசாலையின் காணியை மீள பெற்றுக் கொள்ளும் பொருட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரியும் கட்டளை அதிகாரியுமான கேணல் தல் காகொடவுடனும் தொடர்பு கொண்டு வருகின்றது.

(உ-52)


இலங்கை மின்சார சபை யாழ்.பிரதேசம்

**மின்தடை பற்றிய அறிவித்தல்!**

சுன்னாகம் மின் நிலையத்திலும், மின்மார்க்கங்களும் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் 15.07.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணி வரையும்யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதனை மின் பாவனையாளருக்கு அறியத்தருகின்றேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்.
சுன்னாகம்.

சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும், இலங்கை மின்சார சபை

(C/2202)


## கொழும்பில் குழு மோதல் 8 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்றதற்கு என்ன காரணம் என்று இதுவரை தெரியவரவில்லை.

[உ-7]

## ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பேரியல் அஷ்ரப்பிற்கு உரிமை உண்டு; நீதிமன்று தீர்ப்பு

(கொழும்பு)

தேசியஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு திருமதி பேரியல்அஷ்ரப்பிற்கு உரிமை உண்டு என நீதிமன்றம் நேற்று முன்தினம்தீர்ப்பளித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி எல் எச் அஸ்வர் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு மாவட்டநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தமனு மீதே இவ்வாறு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது (வ)

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல: 24

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

35] லெ கில்பேட், யாழ் மத்திய கல்லூரி
36] வே.விஜிகுமார். வல்வை ம ம. வித்தியாலயம்
37] இ. பாமா, துன்னாலை மெ.மி த.க பாடசாலை
38] சு. துவாரகன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
39] இ. நிருஜன். பெரியபுலம் மகாவித்தியாலயம்
40] ந துசிகேசன், யாழ் மத்தியகல்லூரி
41] இ. நிராகுலன், கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை
42] ச. மதுஸனன், யாழ் மத்தியகல்லூரி
43] அ.ஜெீவன, யாழ் பரியோவான் கல்லூரி
44] சி. கிீன். மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
45] ர. கோபிகன். யாழ் மத்திய கல்லூரி
46] உ. விஜீத். யாழ்.மத்திய கல்லூரி
47] பு பிரசாந்தன், காரைநகர் திபாகராஜா ம ம வித்தியாலயம்
48] ம. யாழினி, வட்டு.யாழ்ப்பாணக்கல்லூரி
49] இ சபிதா, நுணாவில் அ.த.க பாடசாலை
50] க. சோபிகா, அல்லாரை அ.த.க பாடசாலை

## சமூகக்கல்வி போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கமைய தீவகக் கல்வி வலயத்தின், வலய மட்ட சமூகக் கல்விப் போட்டிகள் 14 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00மணிக்கு யாழ். வேலணை சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இப் போட்டி எழுத்துப் பரீட்சை, ஆக்கக் கண்காட்சிப் போட்டி என இருபிரிவுகளாக இடம் பெறவுள்ளது

போட்டிக்கான ஒழுங்குகளைப் புக்களைத்தீவகக் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ் ஏ. ஸ்ரனிஸ்லாஸ் மேற்கொண்டுள்ளார். (உ)

## மஹோற்சவம்

(மந்திகை)

அல்வாய் மாலுசந்தி பிள்ளையார்ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். (மச-23)

## இராசி பலன்

12-7-2001

(ஆனி 28 வியாழன்)

உத்தரட்டாதி பி இ 12.44 வரை
சஷ்டி காலை 7.13வரை
ராகுகாலம் 1.29-2.59
நல்ல நேரம் 5.59-7.29

**மேடம்**
காரியதாமதம், நித்திரைக் குறைவு, சுபச்செலவு, உணர்ச்சிவசப்படல்.

**இடபம்**
காரியம் கைகூடும், புகழடைதல், தனலாபம், குடும்ப சுகம்

**மிதுனம்**
தொழில்வெற்றி, மேன்மை இலட்சுமிகரம், கடினஉழைப்பு

**கடகம்**
மனப்பதட்டம், போசன சுகம் பிரயாணம், முயற்சி தாமதம்

**சிங்கம்**
உறவினர்மனஸ்தாபம், பிரயாணபயம், காரியதடங்கல் அமைதிக் குறைவு

**கன்னி**
சுவாரஸ்யம், நண்பர்கள் சந்திப்பு முயற்சிகைகூடும், பிரயாணம்

**துலாம்**
தொழில் விருத்தி மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், ஆரோக்கியம்

**விருச்சிகம்**
நிலைமாற்றம், குடும்பக் கவலை, வியாதி, காரிய தாமதம்

**தனுசு**
உறவினர்மனஸ்தாபம், வீண்பயம், வியாதி. முயற்சி தாமதம்

**மகரம்**
அன்னியர்சந்திப்பு, வாக்குப் பலிதம் இனிய சம்பவம். காரியநன்மை

**கும்பம்**
தனவிரயம் வீண் வாக்குவாதம், மதிப்புக் குறைவு: முயற்சிதாமதம்

**மீனம்**
கற்பனைமிகுதி. அதிகாரம் ஜனவசியம், சயனசுகம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்


University of Jaffna

The University of Jaffna is closed on the directive of the University Grants Commission. This applies only to the students of the University.

All Academic and Non-academic staff shall report for duty as usual.

In the meantime every effort will be made to restore normalcy soon with the co-operation of the staff and students of the University.

Prof. P. Balasuderampillai
[Vice-Chanceller]

[C/2200]

## இன்று ஒரு தகவல்

# சீறு ஆனால் கடிக்காதே

இறைவன் பூமியிலே பல உயிரினங்களைப் படைத்துள்ளான் அத்துடன் ஒவ்வொரு உயிருக்கும் எதிரியையும் படைத்துள்ளான் உயிருக்கும் எதிரிக்குமிடையே பயமும், ஆபத்தும் தாண்டவமாடுகின்றன எனவே எதிரியிடமிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொரு எதிரிக்கும் அச்சத்தையும் ஆபத்தையும் தரக்கூடிய ஒரு தன்மையையும் அவற்றிற்குக் கொடுத்துள்ளான். இதன் மூலமாக அவை ஏதோ ஒரு வகையில் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்வதுடன் மற்றவற்றிற்கு அவை அச்சுறுத்தலையும் கொடுக்கின்றன. ஒருவனுடைய வளர்ப்பு நாய் எந்தளவுக்கு அவனுக்கு செல்லப் பிராணியாகவும் பாதுகாவலனாகவும் உள்ளதோ அதுபோல மற்றவனுக்கு அச்சத்தையும், உயிராபத்தையும் கொடுப்பதாக உள்ளது. நாய் கடித்தால் ஏற்புத்தடை ஊசி போடவேண்டும். அல்லது அது மரணத்துக்கு அழைத்துச் செல்லும் என்பது நாய்க்குத் தெரியாது. நாய் குரைத்தால் அங்கே ஏதோ வித்தியாசமுண்டு என்பது மனிதனின் எதிர்பார்ப்பு. எனவே மனிதன் ஏனைய உயிரினங்களிடமிருந்தும் எதையோ எதிர்பார்க்கிறான். எனவே அவை சில வேளைகளில் ஆனந்தமாகவும் ஆபத்தாகவும் கூட இருக்கலாம் இது ஏனைய உயிரினங்களோடு மட்டுமன்றி மனிதனுக்கும், மனிதனுக்குமிடையே கூட ஏற்படுவதுண்டு

எனவே இத்தகைய ஒரு நிலையில், மற்றவர்களுக்கு நாம் துன்பம் செய்யாது. மற்றவர்களால் நாம் துன்பப்படாது அதேவேளை எம்மைப் பாதுகாக்கவும் மற்றவர்கள் எம்மை மரியாதை செய்து நடப்பதற்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு குட்டிக்கதை மூலம் அரிய உபதேசத்தினை அருளியுள்ளார்.

இரண்டு கிராமங்களை இணைக்கும் பாதையிலுள்ள ஒரு புற்றினுள் ஒரு நாகபாம்பு வசித்து வந்தது. அப்பாம்பு கடித்ததனால் பலர் இறந்துள்ளனர் அதனால் அப்பாதையால் போக எல்லோரும் அச்சங்கொண்டிருந்தனர். ஒரு சுவாமியார் ஒரு நாள் அப்பாதையால் வந்தார். பாம்பு அவரைக் கடிக்கப் போனது ஆனால் அவருடைய தவத்தின் மகிமையால் அவரை அது நெருங்க முடியவில்லை துறவி பாம்பைப்பார்த்து இனி ஒருவரையும் கடிக்காதே என்று கூறினார்.

அப்படியே செய்வதாகக் கூறிய பாம்பு புற்றில் போய் படுத்துக்கொண்டது. உணவு தேடுவதற்காக மட்டும் அது வெளியே வரும்.

பாம்பிற்கு வயதாகிவிட்டது. அதனால் அதற்கு நஞ்சும் இல்லாது போய் விட்டது. என்று மக்கள் அதைத் துன்புறுத்தினார்கள். சிறுவர்கள் கல்லால் எறிந்து காயப்படுத்தினார்கள் பாம்பு உணவு தேட முடியாமல் மெலிந்து பாதையோரத்தில் பலவீனமுற்றுக் கிடந்தது.

சில நாட்களின் பின் சுவாமி அவ்வீதியால் வந்தார் மெலிந்த பாம்பைக் கண்டு காரணத்தைக் கேட்க பாம்பு வரலாற்றைச் சொல்லியது. சுவாமியார் பாம்பைப் பார்த்து உன்னைக் கடிக்காதே என்று தானே சொன்னேன் சீற வேண்டாம் என்று சொல்லவில்லையே உன் பாதுகாப்பிற்கு நீ சீறு. ஆனால் கடிக்காதே என்றார். அன்று முதல் பாம்பு அப்படியே செய்தது. எல்லோரும் பயந்து பாம்பிற்குக் கிட்டப் போகஅஞ்சி நடந்து கொண்டார்கள். பாம்பும் சுகமாக வாழ்ந்தது. இறைவனின் படைப்பை அலட்சியம் செய்யாமல் எம்மை நாமே பாதுகாத்து பிறரையும் பாதுகாத்த நீதி நெறி தவறாது வாழ்வோம்

**மு. விக்னேஸ்வரன்**
கோப்பாய்

# இலவச மூக்குக் கண்ணாடி இம்முறை 450 பேருக்கு

(புலோலி)

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின், இடம்பெயர்ந்த மக்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் இம்மாதம 15 ஆம் திகதி வைத்தியகலாநிதி கே மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 450 மக்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன

யாழ் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், யாழ் போதனா வைத்தியசாலை மூளை நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வி. குணானந்தன், ஓய்வு பெற்ற சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே. மாணிக்கம், யாழ். போதனா வைத்தியசாலை மயக்க மருந்தியல் நிபுணர் வைத்திய கலாநிதி ஆர். கணேசமூர்த்தி கரவெட்டி பிரதேச செயலர் எஸ் ஸ்ரீநிவாசன். பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ சிவசுவாமி, பளை உதவி அரச அதிபர் எஸ். புத்திசிகாமணி, மருதங்கேணி உதவி அரச அதிபர் வி பி. வேலாயுதபிள்ளை, வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் எஸ். திருஞானசம்பந்தர் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-52)

# இலங்கைக்குத் தெற்கே கடலடித்தள மேடை

## புதிதாக அவதானிப்பு

[கொழும்பு]

இலங்கைக்கு தெற்கே கடலடித்தளமேடை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது

இலங்கை – இந்திய கடற்பிராந்திய செய்கோள் படம் ஒன்றில் இலங்கைத்தீவின் தென்பகுதியில் இக்கடலடித்தளமேடை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடலகவளங்களும் இப்பகுதியில் புதிதாக கண்டறியப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள கடல் நிலவியல் மற்றும் நிலப் பௌதீகவியல் உலகத்தகவல் நிறுவனம் இச்செய்கோள்படத்தை வெளியிட்டுள்ளது. (உ-8)

# 2001 - 2002 கல்வியாண்டு யாழ். பல்கலைக்கு தெரிவான மாணவர் விபரங்கள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு 2001-2002 கல்வியாண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 608 மாணவர்களின் விபரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் யாழ் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன

இதில் மருத்துவம், விவசாயம் உயிரியல்விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், ஆகிய துறைகளுக்கு யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு

### மருத்துவத்துறை

எ. அநுராதா, பி. சிவமயூரன் வை. தினேஸ்காந், எஸ். குகலிகை, எம். ரஞ்சிததர்சினி, ஜெ. ஜெயப்பிரியா, ரி. சேந்தவரன், எ. நளாஜினி, எஸ் சிவாதி, ஆர். கௌதமன், வி. சாரங்கன். ரி. கௌரிபாகன் கே. நிசாந்தினி ரி. ரமணன். வி. அபர்ணா, எம் நவநீதன் எஸ் மயூரன், எஸ் விஜிதா எஸ் நிசாந்தன், ஜீ சிவனுஜா ஜே. கஜேந்திரன், ரி. விஸ்வேதிதன், கெ குமரன். எஸ் சிவகலா, என் பவானி, ஆர். மைத்திரி, என். நல்லதம்பி. எ. சி நிசாந்தினி, எஸ் பஞ்சகல்யாணி, எம். ஸ்ரீசிபன், சிவனுஜா:

### உயிரியல் விஞ்ஞானம்

ஆர். சந்திரிகா, ரி. கஸ்தூரி, எல் பவதாரணி ஏ தீபதர்ஷினி, என். சிறிசாந்தினி, எஸ். தேவகுமார், எஸ். கயிலன், ஜீ கார்த்திக், எஸ். பிரதீபன், எம். ராஜகுமார், என். நந்தகோபன். ஆர். கே. எட்வின்,

பி. பனோஜா, ஆர். சிறியுராதனி, ரி கல்யாணி ஏ. மயூரதன், வை. பிரதீபா கே. தயாளநந்தன் எஸ். ஞானகுமாரன் எஸ். பிரேம்குமார், ஜி. சேந்தன், என். சுவர்ணா ரி. வாசுகி, எஸ். மணிவதனி பி. வரூபா, எஸ் பகீரதி, எஸ் ஜெரன், கே. கேமா, ஆர். சுதர்சன்

### விவசாய பீடம்

பி மாதவன், பி மாதங்கி, கே. சாஜந்தி. எஸ் என். தரணிதரன். எஸ் அரிஞ்சிகை, ஆர் பிருந்தை, கே. ஆரூரன், ஜி செல்வந்தினி என். ரமேஸ், வி. விஜிதன். ஆர் பிரிந்தா, பி. ஜே சங்கீதா, ஜி சரவணன், கே சேந்தன். என் வைதேகி,

ஆர். காயத்திரி, ஆர். சுவேதா, எஸ் பிரிஜசர்மிளா, பீ லலிதாமணி, என். தர்க்காதீபனா, யூ. கோபி, ஆர். ஜனா, ஏ. விஜிந்தினி, எஸ். ஜீவனா, ஜி. நிசாந்தி, எஸ். கரிதாசன், வி. விஜயகுமார்.

### பௌதிக விஞ்ஞானம்

எம். ஜெயந்தன், எஸ் தனுஜா, ஆர். யுரேகா, எஸ். சிவரூபன், எம். சியாமளன், வி. நந்தகோபன். ரி. ராஜேந்திரா. கே. கோபிரமணன், ஜே யசோதரன், எஸ். கார்த்திகா, கே. பிரதீபன். எஸ் லவன் பி. முகுந்தன். என் நவநீதன்.

எஸ். சுஜாதா, பி. வகுலிஜன், என். கோணேஸ்வரன் எஸ் மயூரன், வி. நிர்மலன், எஸ் பத்மகாந்தன்.

ஆர் இராஜேஸ்வரன், எஸ். கார்த்தியாயணி. ரி. லக்மிவாசன். என் புவிகரன், பீ அநுஷா. எஸ் செந்தூரன்

பீ. இளங்கோ, வி ராகுலன் எஸ் ரோஜன். ரி. சுபாகரன். எஸ். வித்யா. பீ. யசோதா, ஜே ஜெயப்பிரியன். வி. செந்தூரன், எஸ் சிவகலா, எஸ் சிறிபிரசன்னா, வி. வினோகரன், ரி. அரவிந்தன், ஜி கவிதா, கே. செல்வபாலன். என். ஜெயந்தன், எம். அந்தோனிப்பிள்ளை, கே திசோகரன்,

கே. விசாகன், கே. சங்கீவன், எஸ் சர்மிலி, ஜி பாரதி, பீ ஜெயராம், ஜி. நிரஞ்ஜன், கே. ரோகினி, எஸ் கரன், கே. ஜெஸ்ரினா, ரி. கிசாந்தன், ஏ இராமலிங்கம், என். தனேஸ். ஆர். கிருஷ்ணராசன். ஆர். பிரசாந்தன், ஏ. குணாளதாஸ்.

எஸ் சர்மிளா, எஸ். ஜதீசன், எஸ். கஜரூபன் கரன், எஸ் அருணோதயன், ஜி ஞானபிரகாசம், பீ நர்த்தனன். எஸ். சர்மிளா, எஸ் ராஜ்குமார், எஸ், அருட்செல்வம், பீ ஜே ஜெயநாதன், எஸ் கேபஜித், எம். நந்தகுமார் ஏ எம். நியூட்டன், எஸ். ரஜீபன், டி குணரத்னம், எஸ். மதனகுமார், எஸ். நாகரட்ணம், பீ. சிவரஞ்ஜன்.

# இன்று

## கலந்துரையாடல்

[ஊர்காவற்றுறை]

வேலணை பிரதேசசெயலர் பிரிவில் சமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறுவோர்களுக்கான கலந்துரையாடலொன்று இன்று மு.ப 10.30 மணிக்கு வேலணை சமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் இந்த ஒய்வூதியத் திட்டம் பற்றிய விளக்கம் அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [செ-75]

# பரு. பாடசாலைக்கு 18 இலட்சம் நிதி ஒதுக்கு

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அபிவிருத்திக்கு அமைச்சர் கே என் டக்ளஸ் தேவானந்தா 18 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதியில் விளையாட்டு மைதானம் திருத்தல், தளபாடங்கள் கொள்வனவு செய்தல், வகுப்பறைகள் திருத்தம் குடிநீர் வசதியேற்படுத்தல், பாடசாலையின் பாதையைத் திருத்திப்புனரமைத்தல், பாடசாலைக்கான மின்சார தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தல், கணனி கொள்வனவு செய்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படஉள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இராணுவ முகாம்பகுதியில் இயங்கி வரும் இப் பாடசாலை கடந்தகாலங்களில் நடைபெற்ற யுத்த அனர்த்தங்களினால் பெருஞ் சேதங்களுக்குள்ளாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-52)

# பட்டப் பகலில் துணிகரக் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பிரதேசத்தில் பட்டப் பகலில் துணிகரக் கொள்ளைச்சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக வானில் பணம் எடுத்துச்செல்லப்பட்டபோது 'வானை' திடீரென வழிமறித்த கொள்ளையர்கள் அதிலிருந்த 27 இலட்சம் ரூபாய்பணத்தை கொள்ளையிட்டு சென்றதுடன் அந்த வானையும் கடத்திச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் செய்வாய்க்கிழமை பகல் 12 00 மணியளவில் இடம் பெற்றது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். [உ-8]

# நெல்லியடியில் நவீன கடைத்தொகுதி அமையும்

(புலோலி)

நெல்லியடி பொதுச் சந்தை இயங்குய இடத்தில் மக்களுக்கு வசதியான நவீன கடைத் தொகுதிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை கரவெட்டி பிரதேச சபை மேற்கொண்டுள்ளது

இந்த வகையில், தற்போதுள்ள சந்தைப் பாதை விசாலிக்கப்பட்டு உள்பகுதி நவீன வசதிகளைக்கொண்ட கடைத் தொகுதியாக நிர்மாணிக்கப் படவுள்ளது.

இந் நவீன வசதிகளைக் கொண்ட கடைத் தொகுதியால் பாவனையாளர்கள் பல்வேறு வகையான நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-52)

# சட்ட விரோத செயலகம் றாகமவில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

றாகம பிரதேசத்தில் போலி அரச செயலகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீடொன்றில் சகல வசதிகளுடனும் இயங்கிவந்த இச் சட்டவிரோத செயலகத்தை திடீரென முற்றுகையிட்ட நீர்கொழும்பு பொலிஸார் அங்கிருந்த 2 பேரைக் கைது செய்துள்ளனர்.

அரச உயரதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரின் பெயர், பதவிகள் பொறிக்கப்பட்ட றப்பர் முத்திரைகளும் ஒரு தொகுதி போலி அடையாள அட்டைகள், பிறப்பு, இறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் உட்பட பல அரச ஆவணங்களும் அப்போலிச் செயலகத்தில கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## காஷ்மீரில் தொடரும் வன்முறைகள் சமாதான முயற்சிகளை குழப்பும்?

(புதுடில்லி)

காஷ்மீரின் முக்கிய பிரதேசம் ஒன்றில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் 18 தீவிரவாதிகள் உட்பட 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்திய பாகிஸ்தான் உச்சி மாநாடு நடைபெறும் நிலையில் காஷ்மீரில் வன்முறைகள் இடம்பெற்று வருவது உச்சி மாநாட்டிற்கு பாதகமாக அமையுமென அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தியாவின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் 400 க்கும் மேற்பட்டவர்கள் வன்முறையினால் பலியாகியுள்ளனர்.

இவர்களில் காஷ்மீர் தீவிரவாதிகளே அநேகமானோர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

தேவாரத்தின் நியமனத்தை எதிர்த்து

## தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்று நிராகரிப்பு

(சென்னை)

தமிழ்நாடு சேரன் கூட்டுச் சிறப்பு அதிரடிப்படையின் தலைவராக வால்டயர் தேவாரம் நியமிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்காக ஓய்வு பெற்ற காவல்துறைத் தலைவர் தேவாரத்தை மீண்டும் அதிரடிப்படைத் தலைவராக ஒப்பந்த அடிப்படையில் நியமித்ததை ஆட்சேபித்து தாக்கலான மனுவினை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மக்கள் இயக்கங்களும் மனித உரிமை இயக்கங்களும் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கையில் தேவாரம் மீண்டும் நிரந்தரத் தலைவராக நியமிக்கப்படவில்லையென்றும் ஒப்பந்த அடிப்படையில் குறிப்பிட்ட காலத்திற்கே சேவையாற்றுவார் என்றும் நீதிபதி தெரிவித்தார். [து]

## தனிநபர் விசாரணைக்கு முன்னாள் முதல்வர் மறுப்பு

(சென்னை)

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி அச்சம் காரணமாகவே தனிநபர் விசாரணைக் கமிஷனை வெறுக்கிறார் என்று முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது;

சென்னை மேம்பாலம் கட்டிய ஊழல் தொடர்பாகவே கருணாநிதி உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்; கைதுவிடயத்தில் காவல்துறை அத்துமீறல்கள் பற்றி விசாரிக்கவே முன்னாள் நீதிபதி இராமன் தலைமையில் விசாரணைக் கமிஷனை தமிழக அரசு நியமித்தது

தனியார் விசாரணைக் கமிஷன் முன், தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் தயாரித்த ஒளிநாடாக்களைக் கையளிக்க வேண்டி வரும் என்ற அச்சத்தாலே தான் கருணாநிதி அக் கமிஷனை வெறுக்கிறார்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கே நள்ளிரவில் கருணாநிதி கைது செய்யப்பட்டார். நான்கு முறை முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கு இது புரியவில்லையா. (து)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ காதணியில் நீந்தும் மீன்

அன்றாடம் விதம் விதமான வடிவங்களில் எல்லாம் காதணிகள் வெளியாகி அம்மணிகளின் காதுகளை அணி செய்யும் இக்காலத்தில், அக்காலத்து பாரிஸ் மாநகர சீமாட்டிகள் அணிந்த காதணிகளை பற்றி அறிந்தால் சற்று வியப்படைவீர்கள்.

மூன்றாம் நெபபோலியன் காலத்தில் பாரிஸ் மாநகர சீமாட்டிகள் சின்னஞ் சிறு பொன்மீன்களை சிறிய கண்ணாடிக் குவளைகளில் அடைத்து காதிலே அணிந்து கொள்வார்களாம். காதுகளுக்குக் கஷ்டம் மீன்களுக்கு உல்லாசம் தான்.

### ★ பென்சில் அணியும் அறிவாளிகள்

எல்லோரும் காதில தோடு தான போடுவார்கள் ஆனால் பிரேசில் நாட்டில் உள்ள பிரேசியல் என்னும் இடத்தில் உள்ளவர்கள் காதிலே பென்சில் அணிபவர்கள் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா?

ஆம்! பிரேசியல் என்ற பின்தங்கிய இராமத்தில் உள்ள மக்கள் படிப்பு வாசமே அறியாதவர்கள் இவர்களில் சிலர் தான் படித்தவர்களாம். அக்கற்றவர்கள் தங்களை ஏனையோரிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு காதிலே ஒரு துளைபோட்டு அதில் பென்சிலைச் செருகி வைத்திருப்பார்களாம் எங்காவது பென்சில் காதுக்காரரைக் கண்டால் அங்குள்ள மக்கள் மிகவும் மரியாதையாக வழிவிடுவார்கள் என்றால் பாருங்களேன்..

-அவதானி-

# புலிகளை விட்டுப் பிரியும் போது துயரம் தாங்காமல் அழுதுவிட்டேன்

## விடுவிக்கப்பட்ட மாலுமி அனுபவப் பகிர்வு

(லண்டன்)

''விடுதலைப்புலிகளையும், ஊரவர்களையும் விட்டுப் பிரியும்போது துயரம்தாங்காமல் அழுதுவிட்டேன். புலிகளுக்கு ஒரு சகோதரன் போலவும் ஊர் மக்களுக்கு செல்லப் பிள்ளைபோலவும் அன்னியோன்னியமாகப் பழகி வந்தேன் என்று ஜெயந்த ஜெயக்கொடி என்ற மாலுமிகூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலில் இருந்து கடந்த 3 ஆம் திகதி தலைவர் பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் விடுவிக்கப்பட்ட எம். வி. மிஷன் கப்பலின் மாலுமியான ஜெயந்த ஜெயக்கொடி மேலும் கூறுகையில்,

புலிகள் என்னை ஒரு சகோதரன்போல நடத்தினார்கள்: தென்பகுதி விடயங்களை அறிந்து கொள்வதற்காக வானொலியையும் சிங்களதினசரிகளையும் எனக்கு தந்திருந்தனர்.

விடுதலைப் புலிகளிடம் மனிதாபிமானம், ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய குணங்கள் நிறைந்துள்ளதோடு அவர்கள் சிறந்த ஆளுமையுடையவர்களாகவும் இருக்கின்றனர்.

ஒருமுறை நான் போரில் அங்கவீனமடைந்த புலிகள் தங்கியிருந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது எனக்கு நெஞ்சம் உருகி விட்டது. ஆனால் அவர்களோ புன்னகையோடு என்னை வரவேற்று எனக்கு ஆறுதல் கூறிப் பேசினார்கள் என்று தெரிவித்துள்ளார். (உ-8)

### செய்திப்பரல்

★ தெற்குச் சீனாவில் ஏற்பட்டுள்ள கடும் புயல், வெள்ளப் பெருக்கு காரணமாக 23 பேர் உயிரிழந்துள்ளதுடன், 290 மில்லியன் டொலர் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது

★ ஹூரியத் தலைவர்களை சந்திக்க சந்தர்ப்பம் தருமாறு இராணுவ ஆட்சியாளர் முஷாரவ் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

★ லத்தீன் அமெரிக்காவின் மிகப் பெரிய சிறைச்சாலையான கராந்திரு சிறைச்சாலையிலிருந்து சுரங்கம் அமைத்து 105 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

★ கொங்கொங்கிற்கு இரு அமெரிக்க யுத்தக் கப்பல்கள் வருவதற்குசீனா அனுமதித்துள்ளது.

★ இந்தோனேஷியாவின் சுமத்ராதீவில் ஏற்பட்ட காட்டுத்தீ, தெற்குத் தாய்லாந்துக்கும் பரவியுள்ளது. (உ-3)

### உலகத் தரிசனம்

**சட்டசபைக் கூட்டம்**

தமிழக சட்டசபைக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது என்று ஆளுநர் ரங்கராஜனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடர் ஒருமாதகாலத்துக்குதொடருமென்றும் மாநில வரவு-செலவுத்திட்டம் இதில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## செய்தித் துளிகள்

### அபிவிருத்திக் குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பான அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [செ-75]

### வாராந்த நிகழ்வுகள்

[யாழ்ப்பாணம்]

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில நாளை வெள்ளிக்கிழமை மு. ப. 10.30 மணிக்கு பேரவை உபதலைவர் க சிவக்கொழுந்துவின் அறிமுகவுரையைத் தொடர்ந்து ''இறைமகனார் துறவு'' என்னும் தலைப்பில் திருமதி க ஜெகவதனர ஜா சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

### முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர்பிரிவிற்குட்பட்டமுன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று பி.ப. 3 30 மணிக்குசோமசுந்தரம்பாலர் பாடசாலையில் நடைபெறுமென யாழ். பிரதேச செயலர் பிரிவு முன்பள்ளி ஆசிரிய சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (உ-8)

### 17 ஆம் திகதி பாடசாலைகள் இயங்காது

எதிர் வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள குடிசன மதிப்பீட்டுப் பணியை ஒட்டி அன்றைய தினம் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் அனைத்தும் மூடப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

அதற்கான பிரதியீட்டு வகுப்புக்கள் 21 ஆம் திகதி நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். [உ-23]

### இயக்குநர் சபை தெரிவு

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவராக டாக்டர் எஸ் திருச்செல்வநாயகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப- தலைவராக விவாகப் பிறப்பு, இறப்பு பதிவாளர் என். கணேசலிங்கமும் இயக்குநர்சபைச் செயலாளராக கணக்காளர் எஸ். இராசையாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-52)

### விளையாட்டு விழா

(யாழ்ப்பணம்)

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் யாழ். பாலர் பாடசாலையின் 9 வது வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது

செல்வி க வளர்மதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகம் புவியியற்றுறை தலைவர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச சபை முன்பள்ளி மாணவர் விளையாட்டுவிழா இன்று பி.ப 2.00 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி சி. திருச்செல்வி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலி. வடக்கு பிரதேசசபைத் தலைவர் திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஸ்ரீவிக்கினேஸ்வரா பாலர் பாடசாலையின் 9-வது வருடாந்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்வி பா ஆரணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்குயாழ். தொழில் நுட்பக் கல்லூரி வர்த்தகத்துறைத் தலைவர் கோ.ஜெயராஜா பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்வார் [செ]

### சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

திருகோணமலை மணிராசகுளம் பகுதியில் கடந்த திங்களன்று படையினர் தேடுதல் நடத்தியபோது 2 பொதுமக்களின் சடலங்கள் மீட்டெடுக்கப்பட்டதாக ஊடகத்தகவல் மையம் அறிவித்துள்ளது. (உ)

### ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வெடிவைத்தகல் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது விழுப்புண் அடைந்தபோராளி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வீரவேங்கை வெற்றியரசன் (வைரமுத்து ஆனந்தன்-மன்னார்) என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

தேரான் தெளிவும்
தெளிந்தான் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்
குறள்

# வலம்புரி

## துணைவேந்தரின் கரத்தை பலப்படுத்துவோம்

1995 ஆம் ஆண்டிற்குப் பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை இயக்குவதென்பது சாதாரண விடயமல்ல. யுத்த சூழல், படையினர் சுற்றிவளைப்பு, பல்கலைக் கழக மாணவர்களின் கைது, போக்கு வரத்துத் தடை இத்தகைய பல்வேறு நெருக்கடிகளின்மத்தியில் யாழ். பல்கழகத்தை மிகச் சிறப்புடன் இயக்கிய பெருமை துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையையே சாரும். அவரின் ஆற்றல், ஆளுமை, அர்ப்பணிப்பு என்பவையே யுத்த சூழ்நிலையிலும் யாழ். பல்கலைக் கழகத்தின் இயக்கத்திற்கும், அபிவிருத்திக்கும் காரணமென்றால் அதற்கு இரு வேறு கருத்து இருக்க முடியாது.

ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வெளிவாரிப் பட்டப் படிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம், யுத்தச் சூழலிலும் தமிழ் இளைஞர், யுவதிகள் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டம் பெற்றுஅதனூடே வேலை வாய்ப்பும்பெற்றாரெனில் அதற்கு மூலகாரணமாக இருந்தவர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை என்பதை தமிழ்ச் சமூகம் ஒரு போதும் மறந்து விடாது.

எனினும் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த போதிலும், அரசின் பார்வையில அவர்ஓர் தமிழன் என்ற தொனிப்பு தெரியவே செய்கிறது. அதே நேரம் யாழ். பல்கலைக் கழகத்தை எப்படியாவது முடக்க வேண்டுமென்ற அரசின் சிந்தனைக்கு துணை வேந்தரின் அதீத செயற்பாடு தடையாக இருந்திருக்கும்.

இந் நிலையிலேயே பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் என். மெண்டிஸ்9 ஜூலை 2001 திகதியிட்டு துணை வேந்தருக்கு அனுப்பிய யு.ஜி.சி பி.எஸ் 13 என்ற இலக்கக் கடிதத்தில் உயர் கல்வி அமைச்சரின் உத்தரவின் பேரில் பல்கலைக் கழகத்தை மறு அறிவித்தல் வரைமூடுமாறுபணித்துள்ளார்.

இதனை மாணவர் சமூகம் உணர்ந்து துணை வேந்தர் பாலசுந்தரம் பிள்ளையின் கரத்தைப் பலப்படுத்தி மீண்டும் பல்கலைக் கழகத்தை இயக்க முன்வர வேண்டும்.

# மனித உயிர்களை மதிக்காத மரதன் ஓட்டம்

# சிற்றூர்திப் பயணிகளின் கண்ணோட்டம்

மரதன் ஓட்டப்போட்டி சைக்கிள் ஓட்டப் போட்டி மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இவைகள் போன்று தனியார் சிற்றூர்திகள் மத்தியிலும் போட்டி ஒன்றை வைத்தால்என்ன?

இன்றைய நாட்களில் பெருந்தெருக்களில் இடம் பெறுகின்ற இடர்ப்பாடுகளைப் பார்க்கும்போது இவ்வாறானதொருவினா யாருக்கும் இயல்பாய் எழத்தான் செய்கிறது.

சிற்றூர்திச் சாரதிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டுமாயின் மேற்சொன்ன போட்டியை முற்ற வெளிபோன்ற சன நடமாட்டம் குறைந்த இடங்களில் அவர்களிடையே நடத்தி திறமையைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் மக்கள் நடமாட்டம் மிகுந்த வீதிகளில் தமது திறமையைக் காண்பிக்கப்போய் உயிர் அழிவுகள் மாத்திரமே விஞ்சப் போகிறது.

இதுவிடயம் இந்த மட்டில் நிற்க ஆட்டுப்பட்டி பார்த்திருப்பீர்கள் மாட்டுப்பட்டி பார்த்திருப்பீர்கள் யாராவது மனிதப்பட்டி பார்த்திருக்கிறீர்களா?

என்ன யோசிக்கிறீர்கள்? பார்க்க விரும்பினால் வேறு எங்கும் போக வேண்டாம். நேரே வீதிக்கு விரையுங்கள் அங்கே பயணிகள் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் சிற்றூர்திகளைப் பாருங்கள்.

இதுமட்டுமா? ஒரு பெரும் மனிதப்போராட்டமே அங்கு இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

ஒற்றை விரலில் ஒரு மணி நேரம்நின்று சாதனை படைப்பவர்களையும்,

முதுகில் மூன்று பேருக்கு இடம்கொடுக்கின்ற தாராள மனம் கொண்டவர்களையும் பத்துப்பேரின் அமுக்கலில் இருந்து விடுபட தனியொருவனாய் நின்று சன்னை மீட்க மற்போர் புரியும் வீராதி வீரர்களையும், 'ங' போல் வளை என்ற ஔவைப் பாட்டியின் அறிவுரையை சிரமேல் ஏற்றுச், செயற்படுகின்றவர்களையும் சாரதியின் அதிரடி நடவடிக்கைகளினால் அந்தரத்தில் எழும்புகின்றவர்களையும், பரதநாட்டியம் பயிலாமலே அபிநயம் பிடிக்கின்றவர்களையும் ஆற்றாது அழுகின்றவர்களையும், ஆண்டவனேஎன வேண்டித் தொழுகின்ற உருக்கமான காட்சிகளையும் ஒரே பார்வையில் தரிசிக்கலாம்.

மக்களுடைய போக்குவரத்துச் செய்யும் நேரத்தை மிச்சப்படுத்த ரயில்கள் அதுவும் மின்சார ரயில்கள் தலைநகர் வரை வந்துவிட்டன.

★ உமா ★

யாழ். குடாநாட்டுக்கு இன்னமும் இவை வராமை வரவேற்கக்கூடியதே என்பது இப்போதுதான் புரிகிறது.

### வாயுவேகம்

அயலில்இன்னோர் போக்குவரத்துச் சாதனத்தைக் கண்டுவிட்டால், எங்களுடைய சாரதிகள் காட்டுகின்ற வாயுவேகத்துக்கு இந்த மின்சார ரயில் மட்டுமென்ன ஏறோப்பிளேன் கூட ஈடு கொடுக்க முடியாது.

சாரதிகளின் இந்த வாயு வேகத்துக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து வழி நடத்துகின்ற நடத்துநர்களையும் பதவிக்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்கின்ற அவர்கள் பக்குவத்தையும்? இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லியே ஆகவேண்டும்.

பத்துப்பேர் உள்ளடங்கும் இடத்தில் பத்து மடங்கு ஆட்களை அடக்குகின்ற திறமையிலாகட்டும்,

இனிய வார்த்தை கூறி முகமலர்ந்து பயணிகளை வரவேற்றுப் பின் அடியாத குறையாகப் பின்னுக்குப் போவெனத் தள்ளுகின்ற தீரத்திலாகட்டும் அவர்களை விஞ்ச இனிமேல்தான் ஆட்கள் பிறக்க வேண்டும்.

சின்ன ஒரு கூட்டுக்குள் அத்தனை பேரையும் அடக்கி கட்டளைகளை ஒன்றன்பின் ஒன்றாக அவர்கள்மீது பிறப்பிப்பதோடல்லாமல், தான் கற்ற கராத்தேயை மக்கள் மீதே அரங்கேற்றி அத்தனை பேரையும் ஆட்டி வைக்கின்ற இந்த அதீத திறமை இந்தச் சிறியவர்களுக்கு எங்கிருந்து தான் வந்ததென்று மூக்கின் மேல் விரலை வைப்பவர்களும் உளர்.

### சோதனைச்சாவடிகள்

இந்த நாட்டில், சந்திக்குச் சந்தியென்ன முழத்துக்கு, முழம் சோதனைச்சாவடிகள் வேண்டுமென்பதன் அவசியப் பாட்டை சிற்றூர்திகளில் தொங்கிக் கொண்டு, முகத்தை நிமிர்த்தி மூச்செடுக்க முடியாது அவதிப் படுகின்ற கணங்களிலும், ''தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற நாமக்கல் கவிஞரின்வீர வரிகளுக்குச் சவால் விடுக்குமாப்போல் கூனிக்குறுகி நிற்கின்ற நிமிடங்களிலும் உணராதார் யார்?

இவைகளும் இல்லாதுவிட்டால்,இறுதித் தரிப்பிடத்தில் எத்தனையோ பேருக்கு இறுதிக்கிரியைகள் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

### சங்கம் அமைத்தல்

ஆசிரியர் சங்கம் உண்டு வணிகர்சங்கம் உண்டு ஏன் இடம்பெயர்ந்தோர் சங்கம், வேலையற்றோர் சங்கம் கூட உண்டு. அவ்வாறே முதல் வேலையாக ''போக்குவரத்துச் சாதனங்களில் இம்சைப் படுவோர் சங்கம்'' ஒன்றும் விரைவில் உருவாக்கப்பட வேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது

வடபிராந்திய சிற்றூர்திச் சங்கம் என்று ஒன்றுண்டு. அது தனியே சிற்றூர்தி உரிமையாளர்களது நலனை மட்டுமே கவனத்தில் எடுத்துச் செயற்படுமாப்போல் தெரிகிறது.

மாறாக சிற்றூர்திகளில் மக்கள் மாக்களாக நடத்தப் படுவதுகுறித்தோ, அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்னும் விடயத்திலோ ஒரு துளியேனும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

பெற்றோல் விலை உயர்வு என்று மூச்சு விடுவதற்கு முன் கட்டணத்தை உயர்த்துகின்றதில் காட்டுகின்ற வேகத்தை என்றைக்கு பயணிகளும் மனிதர்கள் தான் என்று புரிந்து கொண்டு அவர்களை மதிக்குமாப்போல் நடைமுறைகளில் மாற்றம் கொண்டு வருகிறார்களோ அன்றைக்குத்தான் ''சிற்றூர்திச்சேவை'' என்று தலை நிமிர்த்தி குரலுயர்த்திக் கூற முடியும்.

அன்றேல் வெறும் சாவை அணைக்கும் சம்பவங்களாய்த்தான் சிற்றூர்திப்பயணங்கள் அமையும். □

# ஐந்தரை இலட்சம் செலவில் நூலகம் நிர்மாணம்

தென் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் சுமார் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் நூலகம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கல்வியமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதற்கான நிதி கல்வியமைச்சால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம் மகா வித்தியாலய மாணவர்கள் வசதியான நூலகம் இல்லாமையால் பலத்த கஷ்டங்களையனுபவித்து வந்துள்ளனர்.

பாடசாலைக்கு ஆசிரிய நூலகரொருவர் வெகுவிரைவில் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மேற் கொண்டுள்ளது. (உ-52)

# சாயி அருளமுதம்



நீந்துவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டுமானால் நீங்கள் தண்ணீரில் இறங்கி கைகளையும் கால்களையும் ஆட்டி அசைத்துத் தத்தளிக்க வேண்டும். விபூதி (பஸ்மம்) கொடுக்கப் படும் பொழுது அதைப் பெறுபவர் சைவசமயத்தவராயிருக்கவேண்டுமென ஸ்வாமி கருதுகிறாரோ எனச் சிலரிடையே ஒரு ஐயம் நிலவுகிறது. எல்லா ஜீவராசிகளாக விளங்கும் அடிப்படையான பொருள் அழிவற்ற தன்மையுடையது என்பதன் சின்னமே விபூதியாகும். எல்லாப் பொருளுமே சாம்பராகக் கூடியவை. ஆனால் சாம்பரை எவ்வளவு எரித்தாலும் சாம்பராகவே இருக்கும். துறவு, தியாகம் எல்லாக் காமங்களையும் செயலற்ற சாம்பராகச் சுட்டெரிக்கும் ஞானம் ஆகியவற்றை விபூதி குறிக்கின்றது. அது ஈஸ்வரனையும் குறிக்கும். அதை நான் உங்கள் நெற்றியில் பூசுவது நீங்களும் தெய்வீகமானவர்களே என்பதை ஞாபகப்படுத்தவேதான், நீங்கள் யாரென்பது பற்றிய ஒரு பெறுமதியான உபதேசம் அதுவாகும். மேலும் இந்த உடலானது எந்த நேரத்திலும் ஒரு பிடி சாம்பராகலாம் என்பதையும் அது உங்களுக்கு நினைவுறுத்தும். பற்றின்மைக்கும் துறவுக்கும்சாம்பர் ஒருபாடமாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை.

# புற்றளை சித்திவிநாயகர் பாலஸ்தாபனம் இன்று



சுமார் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புத் திருப்பணி வேலைகள் நடைபெறவுள்ள தென் புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது.

வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவாகம சித்தாந்த ஞான தேசிகபானு பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஷாகரம் பிரதிஷ்டா சிரோன்மணி சிவஸ்ரீ சோமாஸ்கந்ததண்டபாணிக தேசிகர் (ஜே.பி) தலைமையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் ஸ்ரீ முருகப் பெருமான் ஆகியோருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (உ-52)

# யாழ் உயர் தொழில்நுட்ப மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதிவருட மாணவனாகிய கிருஷ்ணசாமி திவ்வியன் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதையிட்டு யாழ் உயர்தொழில் நுட்ப நிறுவன மாணவ சமூகத்தினராகிய நாம் பெரு வேதனையடைகின்றோம்.

இவ்வாறு யாழ் உயர் தொழில் நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

இம்மாணவனின் விடுதலைக்காக யாழ் பல்கலைக்கழக சமூகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு எமது பூரண ஒத்துழைப்பினை தெரிவிப்பதுடன் இம்மாணவனின் விடுதலை தொடர்பாக ஓர்சுமூகமான தீர்வு எட்டப்படும் வரை எமது சகல விரிவுரைகளையும் 11 07 2001 புதன் கிழமை மதியத்திலிருந்து காலவரையறையின்றி இடைநிறுத்தி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இணைந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந-24]

# யாழ். பல்கலை மூடப்பட்டது ஜனநாயக விரோதச் செயல்

## அரச மருத்துவர் சங்கம் கண்டனம்

உயர் கல்வி அமைச்சர் அவர்களின் பணிப்பின் பேரில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ள செய்தி அறிந்து எமது உறுப்பினர்கள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் முதற் தடவையாக போர்ச் சூழ்நிலை தவிர்ந்த வேறொரு காரணத்திற்காக பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளமை விசனத்திற்குரியது. இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளை விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு ஜனநாயக நாட்டில் தமது உரிமைகளுக்காகவும் அபிலாசைகளுக்காகவும் தமக்கு எதிரான ஒடுக்குமுறைகள், பாரபட்சங்கள் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் சட்டத்திற்குட்பட்ட வன்முறையற்ற வழியில் செயற்பட மக்கள் அனைவருக்குமுள்ள உரிமையை யாரும் மறுக்கமுடியாது. இவ்வகையில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக அவர்களது உரிமைகள் அபிலாசைகளுக்காகவும் வேறெவரும் குரல் கொடுக்காத நிலையில் கடந்த காலங்களில் யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஜனநாயக வழியில் குரல் கொடுத்ததன் மூலம் ஒரு பல்கலைக்கழகம் என்ற வகையில் தனக்குரிய சமூகப் பொறுப்பை சரிவர ஆற்றி வருவதை யாரும் வரவேற்காமலிருக்க முடியாது.

இந்நிலையில் கடந்த ஆண்டிற்கான விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் திரு கிருஷ்ணசாமி திவ்வியன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் யாழ் மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதனால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

எனவே உடனடியாக மாணவன் திவ்வியனை விடுதலை செய்து பல்கலைக் கழகத்தை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வர வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது. (ந)

# அமைச்சரின் முடிவுக்கு ஊழியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூடப் படுவதற்கான சூழ்நிலை எதுவும் ஏற்படாத நிலையில் பல்கலைக் கழகத்தை மூடியிருப்பது தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் எந்த வித வன்முறையுமற்ற நிலையிலேயே இடம்பெற்றது

பல்கலைக்கழக சொத்துக்களுக்கு துளியளவேனும் சேதம் விளைவிக்கப்படவில்லை அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து இடம்பெற்றன மருத்துவ பீட மாணவர்களுக்கான பரீட்சைகள்கூட இக்காலப் பகுதியில் நடைபெற்றுவந்தது இந்நிலையிலேயே பல்கலைக்கழகம் மூடப் பட்டுள்ளது.

பல்கலைக்கழகம் மூடப்பட்டதன் உடனடிவிளைவாக பல்கலை மாணவர்களின் பாதுகாப்புகுறித்த அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உயர்கல்வி அமைச்சரின் முடிவைநாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

## திவ்வியனை உடன் விடுதலை செய்க

# யாழ். கல்வியற்கல்லூரி மாணவர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மூடப்பட்டமையிட்டு எமது தேசியக் கல்விக்கல்லூரி மிகவும்கவலை கொள்கிறது. இதையிட்டு வேதனையடையாத தமிழ் நெஞ்சங்கள் இருக்கமுடியாது

எமினத்தவர்க்கு தன்னிகரற்ற சேவைபுரிந்து வெள்ளி விழாக்கண்ட யாழ்பல்கலைக் கழகத்தை கால வரையறையின்றி மூடிய செயல் கண்டு வேதனையடைகின்றோம்.

மாணவர்களின் உணர்வுகளைபுரிந்து கொள்ளவேண்டியது ஒவ்வொருவரதும்தலையாய கடமையாகும்

மேலும் திவ்வியன் பல்கலைக்கழக மாணவனாகஇருந்தும் கைது செய்யப்பட்டிருப்பது கவலைக்குரியதாகும் அத்துடன் அவரை உடன் விடுதலை செய்யுமாறும் கல்லூரி ஆசிரிய மாணவமன்றம் கேட்டுக்கொள்கிறது

இவ்வாறு யாழ் தேசியக்கல்வியல்கல்லூரி ஆசிரியர்மாணவமன்றம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது. (ந)

# முக்கிய அறிவித்தல்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பணிப்புரையின்படி யாழ்ப்பாணப் பலகலைக் கழகம் மூடப்பட்டது. இது பல்கலைக்கழகத்தின் மாணவர்கட்கு மாத்திரம் ஏற்புடையதாகும். எல்லா கல்வி, கல்விசாராப் பதவியினரும் வழமைபோல் கடமைக்கு வருதல் வேண்டும்.

அதேவேளை, பல்கலைக்கழகப் பதவியினரதும் மாணவரினதும் ஒத்துழைப்புடன் விரைவாக இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

(ஓ-22.3) துணைவேந்தர்

## வடமராட்சி...

மேற்கொள்ளப்பட்ட இதேவேளை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் அதனை அண்மித்த பாடசாலைகளிலும் மாணவர்களின் வரவு மிகக்குறைவாக காணப்பட்டதாகவும்எமது பிரதேசசெய்தியாளர்கள் அறிவித்துள்ளனர் (வ-52,10.59)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.00மணிக்கு அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது

இவ்விழாவில் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராஜா பிரதமவிருந்தினராகவும், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ் தங்கராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொளவார்கள்.

சிவ ஸ்ரீ. ச. சிறீஸ்கந்தராசாக் குருக்கள் ஆசியுரைவழங்குவார். (வ)

## அமைச்சரவை..

டோபிள்ளை ஆகியோர் கூட்டத்திலும் வெளிநடப்புச் செய்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது. (வ)

## தொலைபேசி...

ணங்கள் ஒழுங்காக் செலுத்தாத தவறிய தொலைபேசி பாவனையாளர்களினதும் தொலை தொடர்புசேவை நடத்துபவர்களினதும் இணைப்புக்களைநேற்றுமுதல் துண்டிக்கப்பட்டுள்ளது.

தொலை பேசிக்கட்டணம் கட்டிய பின் இவர்களுக்கான தொலைபேசிஇணைப்பு வழங்கப்படுமென தெரிவிக்கப் படுகிறது: [வ]

## ஜனாதிபதியின்..

புதைக்கும் செயலாகும்

பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைப்பதென்றும், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமென்றும் ஜனாதிபதி திடீரென அறிவித்திருப்பது தனது சிறுபான்மை அரசு எந்நேரமும் ஆட்டம் காணும் நிலையில் உள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது என்றும் தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியின் எதேச்சதிகார போக்கை கண்டித்து அவருக்கு தகுந்த பாடம் கற்பிக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும என்றும் கேட்டுள்ளார். (வ)

## ஜனாதிபதியின் முடிவு

லணி அரசு நேற்றுதீர்மானித்திருந்தது. 1978ம ஆண்டு அரசியல் யாப்பே பாராளுமன்றத்தில் தோன்றியுள்ள நெருக்கடி நிலைக்கு முக்கிய காரணமாகும் நடந்து முடிந்த இருதேர்தல்களின் போது தொகுதி ரீதியாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசே அதிகமான தொகுதிகளைப்பற்றியிருந்தது.

தற்போதையதேர்தல்முறையால் மக்கள் வளங்குப ஆணை சரியான முறையில் கிடைக்கவில்லை எனவே பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய மக்களின் அபிப்பிராயத்தை சரியானமுறையில் பிரதிபலிக்கக்கூடியபுதிய அரசியல்யாப்புஒன்றுதேவைப் படுகின்றது.

தற்போதைய அரசின்கீழ் பலப்படுத்தப்பட்ட மக்களின் மனிதஉரிமை ஜனநாயகசுதந்திரம் போன்றவற்றை மேலும் பலப்படுத்தப்பட வேண்டியுளளது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (வ)

## குழு நிகழ்வுகளில்

# முதலிடம்

(புலோலி)

கல்வித்திணைக்கள வலய மட்டத்தில் நடாத்திய குழு நிகழ்வு ஆங்கிலப் பாடல் போட்டியின் சிரேஷ்ட பிரிவு, கனிஷ்டபிரிவு ஆகிய இரு பிரிவிலும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந் நிகழ்வுகள் கல்வித் திணைக்களத்தால் இம்முறை புதிதாக அறிமுகம் செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-52)

## மோட்டார் சைக்கிள்

# திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டிற்கு வெளியேநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் கந்தர் மடம் குமாரசாமி வீதியில் இடம் பெற்றது.

மேற்படி வீதியிலுள்ள முதலாம் இலக்க வீட்டிற்குமுன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 140- 8413இலக்கம்கொண்ட மேற் 50ரக மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப் பட்டுள்ளது. (ந)

## பெரும்...

அவசரமாகக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 19ஆம்திகதி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்க்கட்சிகளின் ஆதரவும் கோரப்படவுள்ளது.

இதேவேளை எதிர்க்கட்சிப் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் அன்றைய தினம் நடைபெறவுள்ள கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை பதவியிலிருந்து விலகுமாறு கோரும் தீர்மானமும் மேற்கொளளப்படவுள்ளது. (வ)

## திவ்வியனின்...

விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்படடுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இன்றைய பாடசாலை மாணவராகிய நீங்கள் நாளைய பல்கலைக்கழகச் செல்வங்கள் எனவே இன்று எமக்கு ஏற்பட்டுள்ள அவலம் நாளையும் தொடரப்போகின்றது மாணவர்சக்திமா பெரும்சக்தி என்பதனை பேரினவாதிகளுக்கு நினைவுபடுத்த ஒன்றுதிரளுமாறும் கேட்கப்பட்டுளளது. (ந)

ராஜா
யாழ்ப்பாணம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
சிட்டிசன்
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)

தங்க நகையுலகில் தமக்கென தனியிடம் பிடித்தவர்கள்
வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P - Fax - 2824
(சி-5123)

இப் பத்திரிகை "வலம்புரி" அச்சக ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலைமாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.